பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 | வைகாசி 13 | றஜப் 11 | இதழ் 106
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 26-5-80



UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-5-26
PERIODICALS DIVISION
LIBRARY


## தேசிய எதிர்ப்பு தினத்தில் த. இ. பேரவை பங்குபற்றும்

### செயற்குழு தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி அடுத்தமாதம் 5-ந் திகதி நடாத்தும் தேசிய எதிர்ப்புத்தினத்திற்கு ஆதரவளிப்பதென்றும் அந்த எதிர்ப்புநடவடிக்கையில் பங்குபற்றுவதென்றும் தமிழ் இளைஞர் பேரவை மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

நேற்று நடைபெற்ற பேரவையின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

ஜூன் மாதம் 5-ந் திகதி முதலாளித்துவ பாஸிய ஆட்சிக்கெதிராகப் போராடும் இயக்கங்களின் கோரிக்கைகளை ஆதரித்து அவை நடாத்தும்

(8-ம் பக்கம் பார்க்க)

# சிங்கள தமிழ் மக்களுக்கு இலங்கை தவிர வேறு தாயகம் கிடையாது

## கடற்படை ஜீப் பொலிஸ் காவலில்; சாரதி விசாரணை

### வயோதிபரை மோதிவிட்டு மறைந்ததாம்

(மாவிட்டபுரம்)

வயோதிபர் ஒருவரை மோதிவிட்டு ஓடிமறைந்ததாக கூறப்படும் கடற்படையினரின் ஜீப் காங்கேசன்துறை பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டு அதன் சாரதி விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளார்.

காங்கேசன்துறை சந்திக் கண்மையிலுள்ள தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கக்கிளை நிலையத்தில் காவலாளியான செல்லப்பா என்பவரை வீதியால் வந்த ஜீப் வண்டியொன்று மோதியதைபடுத்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்ட அவ்வயோதிபர் அங்கு காலமானார்.

இம்மரணம் குறித்து மரண விசாரணையில் மேற்படி வயோதிபரை கடற்படையினருக்குச் சொந்தமான ஜீப் வண்டியே மோதிவிட்டு ஓடி மறைந்ததாக சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டதால் காங்கேசன் துறைப் பொலிசார் இது குறித்து விசாரணை செய்துவந்தனர்.

இதனையடுத்து கடற்படைத் தளபதி மேற்படி ஜீப்பையும், சாரதியையும் காங்கேசன் துறைப் பொலிசில் ஒப்படைத்துள்ளார்.

ஜீப் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டு சாரதி விசாரணை செய்யப்பட்டுவருகிறார்.

## இரு இனத்தவரும் இணைந்து நாட்டை அபிவிருத்தி செய்யவேண்டும்

### யாழ். நகரில் பிரதி அமைச்சர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களுக்கென்றாலும்சரி, சிங்கள மக்களுக்கென்றாலும்சரி இலங்கையைவிட வேறு தாயகமே கிடையாது. எனவே எமது தாயகத்தை அபிவிருத்திசெய்ய தமிழ்மக்கள் சிங்கள மக்களோடு தோளோடு தோள்நின்று உழைக்க வேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் மாலை யாழ்மாநகர மண்டபத்தில்நடைபெற்றயாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இறுதிநாள் நிகழ்ச்சியின்போது பிரதம விருந்தினராகப் பங்குபற்றி உரையாற்றிய இளைஞர் விவகார வேலைவாய்ப்புப் பிரதி அமைச்சர் திரு சாமினி அத்துக்கோறளை கூறினார்.

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பி ஜெகநாதன் தலைமையில் மேற்படி விழா நடைபெற்றது.

இளைஞர் வாரத்தில் பங்குபற்றி வெற்றியீட்டியோருக்கு பிரதி அமைச்சர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

பிரதி அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இந்த நாட்டைஅபிவிருத்தியடையச் செய்யவே எமது அரசு விரும்பி செயல்பட்டு வருகிறது. இதற்காக கடந்த 30 ஆண்டுகளாக இருந்துவந்த நிர்வாக அமைப்பு முறையை மாற்றி நிர்வாகத்தை பரவலாக்கி மாவட்ட அபிவிருத்தி சபைகள் மூலம் நாட்டை அபிவிருத்தியடைச் செய்ய வழிவகுக்கப் பட்டு வருகின்றன.

கடந்த 30 வருடங்களாக இருந்துவரும் நிர்வாகத்தை திடீரென மாற்றியமைப்பதில் பெரும் சிரமங்கள் தோற்றிய போதிலும் ஜனாதிபதி நிர்வாகத்தைப் பரவலாக்கி இந்த நாட்டில் வாழ்கின்ற இளைஞர்களின் கையில் நிர்வாகத்தை ஒப்படைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

இளைஞர்களும், யுவதிகளும் தான் இந்தநாட்டின் சிற்பிகள் என ஜனாதிபதி பரிபூரணமாக நம்புகின்றார். அதனால்தான் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தை அவர் உண்டாக்கினார்.

[8 ம்பக்கம் பார்க்க]

## தலைவர்கள்மேல் மக்கள் நம்பிக்கைவைக்க வேண்டும்

### ஈராக் இதற்கு நல்ல உதாரணம் என்றும் கூறுகிறார் யாழ். எம். பி.

(யாழ்ப்பாணம்)

"தலைவர்கள் மீது மக்கள் பூரணநம்பிக்கை வைத்தால் நாடும் மக்களும் எழுச்சியுறுவர். இந்த உண்மைக்கு எடுத்துக்காட்டாக ஈராக் குடியரசு எம் கண்முன்னே நிற்கிறது."

இவ்வாறு ஈராக் விஜயத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்பிய யாழ் எம்.பி திரு வெ. யோகேஸ்வரன் எமது நிருபரிடம் வலியுறுத்திக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈராக் மக்கள் தங்களது தலைவரும் ஈராக் குடியரசின் ஜனாதிபதியுமான ஜனாப் சதாம் ஹுசேன் மேல் பூரண நம்பிக்கை வைத்து அவரது வழிகாட்டலையும் அறிவுரைகளையும் ஏற்று செயல்பட்டுவருகின்றனர். இதனாலேயே ஈராக் ஒரு பலம் பொருந்திய மக்கள் குடியரசாகத் தலைநிமிர்ந்து நிற்கிறது. மக்கள் எவ்விதம் தலைமைக்கு அமைந்து நடந்து தங்கள் இலட்சியங்களை வெல்லவேண்டுமென்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

#### விடுதலை நேரத்தில்

இன்று மட்டுமல்ல ஈராக்கில் ஜூலை 17 புரட்சி நடைபெற்ற விடுதலைக்கால கட்டத்திலும் மக்கள் புரட்சிக்கு தலைமைதாங்கிய பாத்சோஷலிஸ்டு கட்சிக்கும் தலைவர்களுக்கும் அமைந்து கடமை-கண்ணியம்- கட்டுப்பாட்டோடு விடுதலைப் பயணத்தை தொடர்ந்தனர். இவ்வாறு ஒரு தலைமைக்கும் தம் தலைவனுக்கும் நெஞ்சில் சந்தேகத்திற்கிடமின்றி ஈராக் மக்கள் விசுவாசத்துடன் நடப்பதாலேயே ஈராக் கதின் மூன்று குறுகிய ஆண்டுகளுள் உலகின் ஒரு முக்கிய சக்தியாக ஒளிவிடுகிறது" (கி-இ)

## சிறிமாவுக்கு எதிரான ஜனாதிபதி ஆணைக்குழுமுன் இன்று

(கொழும்பு)

முன்னாள் பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு எதிராகச் சுமத்தப் பட்டுள்ள ஐந்து குற்றச்சாட்டுக்கள் குறித்து இன்று கொழும்பில் ஜனாதிபதி விசேட ஆணைக் குழுமுன்னிலையில் பிரதிசொலிஸிட்டர் ஜெனரல் திரு. சுனில் டி. சில்வா விளக்கம் அளிப்பார்.

6வது முதல் 10வது வரையிலான இந்த ஐந்து குற்றச்சாட்டுகள் விபரம் வருமாறு:

அவசர காலச்சட்டத்தை துஷ்பிரயோகம் செய்தமை.

அரசியல் கட்சிகளின் உரிமைகளை அவசரகாலச்சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தியமை.

அத்தனகலையில் நடைபெற இருந்த சத்தியாக்கிரகத்தைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

பௌத்த பிக்கு ஒருவரை அவரது இருப்பிடத்திலிருந்து

(8-ம் பக்கம்பார்க்க)

தமிழகத் தேர்தல்

## 114தொகுதிகளில்இன்றுடன் பிரசாரம் முடிவடைகிறது

(சென்னை)

தமிழகத்தில் இம்மாதம் 28-ம் திகதி தேர்தல் நடைபெறும் 114 தொகுதிகளில் இன்று திங்கட்கிழமை மாலை நாலரை மணியுடன் தேர்தல் பிரசாரம் முடிவடைகிறது.

இம்மாதம் 31 ம் திகதி தேர்தல் நடைபெறும் மீதி 120 தொகுதிகளிலும் எதிர் வரும் வியாழக்கிழமை மாலை நாலரை மணியுடன் தேர்தல் பிரசாரம் முடிவடையும்.

சென்னையில் பொலிஸ் தடை உத்தரவு இருந்தபோதிலும் 30 பல கட்சி ஊர்வலங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன என்றும் தமிழ்

(8-ம் பக்கம் பார்க்க)

## மலை உச்சியில் தேர்தல் சின்னம்

சென்னை, மே 25

வேலூர் தொகுதியில் போட்டியிடும் ஜனதா கட்சி வேட்பாளர் திரு கே. ஈஸ்வரன் வாக்காளர்களைக் கவருவதற்காக நகரிலுள்ள மலைஉச்சியில் தமது தேர்தல் சின்னமான குடை [illegible] (இ)

## கலைஞரின் கூட்டம்பார்க்க 30பேர்சென்றலொறிவிபத்து!

### 5 பேர் பலி

சென்னை, மே 25

தமிழக தலைவர் திரு மு கருணாநிதி கலந்துகொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தைப் பார்க்க 30 பேருடன் சென்ற மணல் லொறி ஒன்று கவிழ்ந்ததில் 5 பேர் பலியாகினர்.

இச்சம்பவம் லால்குடிக்கு அருகில் இடம்பெற்றது. (இ)

## கவுணாவத்தை

### வைரவர் கோவில், கருகம்பனை

வெள்ளிக்கிழமை 10-ம் திகதி விளக்கு வைக்கப்பட்டுள்ளது. நிகழும் சனிக்கிழமை வைகாசி 18-ந் திகதி (31-5-80) பொங்கல் நடைபெறும். இக்கோவில் தொண்டர் முருகர் செல்லக்குட்டி உயிர்ப்பலியிடும் நேர்த்திக்கடன்காரர் சார்பில் யாழ்ப்பாணக் கோட்டில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இதன் விளைவாக உயிர்ப்பலியிட உத்தரவு கிடைத்தால் வழமைபோல் எல்லாம் நடைபெறும்.

ஆறுமுகம் வைத்தீஸ்வரர்,
தர்மகர்த்தாவும், முகாமையாளரும்.
(MANAGER)

5878

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

25 ஸ்ரீ மஸிபெர்குசன் 135 உழவு யந்திரம், ஒரே உரிமையாளர் பாவிப்பில் உள்ளது. கலப்பை, பெட்டி சகிதம் விற்பனைக்குண்டு 3/9, (31) பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். 5877

AVERY 6 அந்தர் மேடைத் தராசு, 56 இருத்தல் மேசைத் தராசு, 1. H P இங்கிலீஸ் மோட்டார். 6, பிரதான வீதி, பருத்தித்துறை. 5860

### காணவில்லை

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முன்பாக காரைநகர் வீதியில் தபால் கந்தோருக்கு அருகாமையில் 11 பரப்புக்காணியும், கடைகளும் கிணற்றுடன்விற்பனைக்குண்டு. இந் நிலப்பரப்புக்கள் துண்டுகள் ஆகவும் விற்கப்படும். முகவரி; செல்லக்கண்டு, டயானி இண்டஸ்ரீஸ், 222, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5867


## அம்மன் ஆலய பொங்கல் விழா

(கொடிகாமம்)

டண்டித்தலைச் சி கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் விழா இம்மாதம் 28-ம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அன்று காலை விசேட அபிசேக ஆராதனைகளும், இரவு பொங்கல், குளுத்தியும் நடைபெறவுள்ளன. (கு)

# பாடசாலைகளில் இடமின்றி உயர் வகுப்பு மாணவர் கஷ்டம்

## கல்விப்பணிப்பாளருக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"1979ம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த பல மாணவர்கள் க. பொ. த. உயர்தர வகுப்பில் சேர்ந்து உயர் கல்வி பெற பாடசாலைகளில் இடமில்லாது கஷ்டப்படுகிறார்கள், இவர்களுக்குப் பாடசாலைகளில் இடங்களைப் பெற்றுக் கொடுக்க வடபிராந்தியக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்,

இவ்வாறு, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்டக் கிளையின் சார்பில் திரு. வே. சி சிவபாலசிங்கம் வடபிராந்திய கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளனர். அம் மகஜரில் மேலும் தெரிவித்துள்ளதாவது!

"1979ம் ஆண்டு மார்கழி மாதம் நடைபெற்ற க. பொ. த (சாதாரண) பரீட்சையில் சித்தி பெற்று க. பொ. த உயர்தர வகுப்பில் கற்பதற்கு தகுதியுடைய பல மாணவ, மாணவிகள் பாடசாலைகளிற் சேர்ந்து படிப்பதற்கு இடம் கிடையாது அலைந்து திரிகின்றனர் இதனால் பெற்றோர் கவலையடைந்துள்ளனர். இந்த நிலையிலிருக்கும் மாணவர்களின் உயர்கல்வியைத் தொடர்வதற்கு க பொ. த (உயர் வகுப்பு) உள்ள பாடசாலைகளில் மேலதிக வகுப்புகளை வைத்து உதவியோ, அல்லது க. பொ. த உயர் வகுப்பு வைப்பதற்கு தகுதியும் வசதியும் உள்ள பாடசாலைகளில் புதிய வகுப்புகளை ஏற்படுத்தியோ மாணவர்களின் குறைபோக்கி உயர்கல்வி பெற வசதி செய்து தருமாறு வேண்டுகிறேன்" என்று கோரியுள்ளார். (கொ)

# "தோசை வடை கோஷத்தை இனியாவது நிறுத்துங்கள்"

## யாழ். மேயர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கடந்த மேதின விழாவின் போது கொழும்பில் நடந்த இடதுசாரி தொழிற்சங்க ஊர்வலத்தில் நல்லெண்ணை தோசை வடை, கோஷத்தை இடதுசாரி தொழிற்சங்கங்கள் எழும்பி தமிழ் மக்களைக் கேலி செய்தனர். இனிமேலாவது வேற்றுமையை மறந்து எல்லாத் தொழிலாளரும் உரிமை பெற முயற்சிக்கவேண்டும்.

யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் நடந்த ஸ்ரீலங்கா உள்ளுராட்சி எழுதுவினைஞர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். நகரசபை முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தமிழில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

### தனிச்சிங்களத்தில்

சங்கத் தலைவர் திரு. டி. பி பொத்தல் கொட தலைமையில் நடந்த இக்கூட்ட நிகழ்ச்சிகள் தனிச்சிங்களத்தில் நடைபெற்றது. மேடையில் தொங்கவிடப்பட்டிருந்த சங்கப் பெயர் தனிச்சிங்களத்தில் காணப்பட்டது. செயலாளரின் வருடாந்த அறிக்கை சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டும் வெளியிடப்பட்டிருந்தன.

தென்னிலங்கையிலிருந்து 6 விசேட பஸ்களில் சங்க உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். மொழி பெயர்ப்பு ஒழுங்குகள் எதுவும் செய்யப்படவில்லை.

யாழ். நகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் மேலும் கூறியதாவது:-

தமிழ் ஈழத்தை மீட்டுப் புனரமைப்புச் செய்யவேண்டுமென்ற கூட்டணியைச் சேர்ந்தவன் நான்.

இச்சங்கம் தனது வருடாந்த பொதுக்கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவதையிட்டு நான் மிகவும் பாராட்டுகிறேன். இத்தீவில் இரு இனங்கள் வாழுகின்றன. இரண்டு இனங்களும், பரஸ்பரம் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்கு இச்சந்தர்ப்பம் உதவக்கூடியதாக அமையும்.

இச்சங்க உறுப்பினர்கள் எடுக்கும் முயற்சிகள் வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

தொழிற்சங்கத் தலைவர் திரு. இலவி மௌலானா காடையர்களால் தாக்கப்பட்டபோது அந்த நேரத்தில் யாழ். மாநகரசபைத் தலைவர் என்ற முறையில் அதற்குக் குரல் கொடுத்து அறிக்கை விட்டேன். அதுமட்டுமன்றி கண்டனம் தெரிவித்துத் தீர்மானமும் நிறைவேற்றினேம்

ஆனல் யாழ்ப்பாணத்தில் அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப்பட்ட சமயம் நடந்த அட்டூழியங்களுக்கு. இடதுசாரித் தொழிற் சங்கங்கள் கூட்டாக கண்டனம் தெரிவிக்கவில்லை.

சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டு, தமிழ் ஊழியர்கள், பல தொல்லைகளுக்கு உட்பட்ட போது, தென்னிலங்கையிலுள்ள தொழிற் சங்கங்கள் கண்டனம் தெரிவிக்கவில்லை. 66-ம் ஆண்டு ஜனவரி 8-ம் தேதி உத்தியோக மொழி சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வந்த நேரத்தில் கொழும்பில் ஊர்வலம் நடத்தி கண்டனம் தெரிவித்தார்கள் இனிமேலாவது வேற்றுமைகளை மறந்து செயற்படுங்கள்

உள்ளுராட்சி உதவி ஆணையாளர் திரு. அல்ரன் அல்பிரட் உட்பட மற்றும் பலர் பேசினார்கள். (க)

### மட்டக்களப்பு

# நவீன நகர் முதற்கட்ட வேலைகளுக்கு ரூ. 50 லட்சம்!

(மட்டக்களப்பு)

மட்டுநகர் நவீனநகர் திட்டம் முதற்கட்ட வேலைக்கு 50 லட்சம் ரூபாய்.

மட்டக்களப்பு நவீன நகர் திட்டதிற்கான வேலைகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன. இத்திட்ட வேலைகள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் ஆகியோர் கவனித்து வருகின்றார்கள்.

மூன்று கட்டங்களில் நடைபெறவுள்ள இந்த நவீன நகர திட்டத்தின் முதற்கட்ட வேலைகளுக்கு 50 லட்சம் ரூபாய் செலவிடப்படும். இதற்கான மதிப்பீடு வரைபட வேலைகள் நாடு நகர அபிவிருத்தி சபையினரால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதன்பிரகாரம் முதற்கட்ட வேலையாக மட்டுநகர் கோட்டை பூங்காவனம் அருகேயுள்ள சுங்க வீதியில் அமைந்துள்ள காந்தி சிலைமுதல் கூ. மொ விற்பனை நிலையம் வரையுள்ள வர்த்தக நிலையங்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்படும் இவ்விடத்தில் வர்த்தக நிலையங்கள், வங்கிகள், அரசஅலுவலகங்களைக் கொண்ட பாரிய கட்டிடங்கள் அமைக்கப்படும், வாவி ஓரத்தில் மக்கள் பொழுது போக்கக்கூடிய நவீன பூங்கா ஒன்று சகல வசதிகளுடனும் அமையும்.

இப்பூங்காவின் மத்தியில் "பாடும் மீன்" சின்னம் அமைக்கப்படும்

இத்திட்டத்திற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப் படலாமென தெரியவருகிறது.

# சித்த ஆயுர்வேதப் பரீட்சை முடிவுகள்

(பண்டத்தரிப்பு)

கடந்த 1979ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நடைபெற்றயாழ். லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி இறுதிப் பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் கொழும்பு ஆயுர்வேதத் திணைக்களத்தினால் மேற்படி கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப் பரீட்சைக்கு தோற்றிய மொத்தம் 71பேரில் 18பேர் பூரண சித்தியடைந்துள்ளனர். இம்முறை மிகவும் குறைவான தொகையினர் சித்தியடைந்தமைக்கு கடந்த 1976ம் ஆண்டு தொடக்கம் மூன்று ஆண்டுகள் இறுதிப் பரீட்சையை திட்டமிட்டபடி நடாத்த ஆயுர்வேதத் திணைக்களம் தவறிவிட்டதே காரணம் என்று மேற்படி கல்லூரி உபஅதிபரும், வடஇலங்கை சுதேச வைத்திய சபையின் செயலாளருமான டாக்டர், சுகந்தன் இலகுசித்தம்பி தெரிவித்தார். இப்பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம் பின்வருமாறு:-

சுருந்ததி வைத்திலிங்கம், கிறிஸ்தியன் மேரி யோசவ், லலிதாராணி முத்துலிங்கம், இப்ராகிம் முகமட் அஸ்ரார், கே, வி வி. பரமசிவம், ஆர். சிவஞானசிங்கம், யூ. கந்தையா, ரத்னேஸ்வரி இரத்தினசபாபதி, எ. சகாயநாதன், சரோஜினி கணபதிப்பிள்ளை, சிவாஜேஸ்வரி சதாசிவம், கே. சோமாஸ்கந்தராசா, மேரி சுசிலா சோமசுந்தரம், மாலினி தவசீலன், திலகவதி பொன்னுத்துரை ஏ. ஜி. வீரசிங்கம், கலைச்செல்வி தியாகராசா, குமாரேஸ்ரி பரம்சோதி.

## யாருடையது ?

யாழ். இந்துக் கல்லூரி பழையமாணவர் ஒருவரால் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் கண்டெடுக்கப்பட்ட பெரிய திறப்புக் கோர்வை ஒன்று 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.


## தேவை

1. விற்பனையாளர் (SALESMAN)
மோட்டோர் உதிரிப்பாக ஸ்தாபனத்தில் கடமையாற்ற உதிரிப்பாக அனுபவமுள்ள ஆங்கில அறிவுள்ளவர்.

2. லிகிதர் CLERK)
கந்தோர் தின வேலைகளைக் கவனிக்க ஆங்கில அறிவுள்ள லிகிதர் (Clerk) ஆங்கில தட்டச்சில் அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது

3. சாரதி DRIVER)
லொறி (Licience உடைய சாரதி கிளீன் லைசன்ஸ் (Clean Licience) உடையவர் நற்சாட்சிப் பத்திரங்களுடன் 2-6-80-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 5875,
C.o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
5875

## தேவை

கொழும்பிலுள்ள பிரபலமான பாதுகாப்புச் சேவை நிலையத்திற்கு
கொழும்பு துறைமுகம், கொழும்பு மாவட்டம், மலைநாட்டுப் பகுதிகள் ஆகியவற்றில் சேவையாற்றுவதற்கென
* பாதுகாப்புச் சேவை மேற்பார்வையாளர்கள்
* பாதுகாப்புச் சேவையாளர்கள்

உடனடியாகத் தேவை

விண்ணப்பிக்க விரும்புவோர்
411, கோவில் வீதி, (பின் வீதி) நல்லூர்
என்னும் விலாசத்துக்கு
29, 30 ந் திகதிகளில் காலை 9-00 மணிக்கும்
பிற்பகல் 3.00 மணிக்கும் இடையில்
தங்கள் விண்ணப்பங்களுடனும், நற்சாட்சிப்பத்திரங்களுடனும், பிறப்பு சாட்சிப் பத்திரத்துடனும்
நேரில் வரவும்.
மாதாந்த சம்பளம் ரூபா 425/ க்கு மேல்
மேலதிக நேர ஊதியமும் அளிக்கப்படும்.
திடகாத்திரமும், ஆங்கில அறிவும் உள்ளவர்களுக்கு
முன்னுரிமை வழங்கப்படும்.
மரைன் அன் பீல்ட் பாதுகாப்புச் சேவை,
MARINE & F ELD SECURITY SERVICES,
Y. M. B. A. Building, Colombo-1
5880

## பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனம்
## சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்விகள்

பரந்தனில் உள்ள பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபன ஊழியர்கள் சுமார் 500 பேருக்கு
சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன
கேள்வி நிபந்தனைகளையும் கேள்விப்பத்திரங்களையும்
பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபன அலுவலகத்தில்
மீளப்பெறக்கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- செலுத்திப்
பெற்றுக்கொள்ளலாம் சித்தி பெற்ற கேள்விதாரர் ஒப்பந்தம் நிறைவேற்றும் பொருட்டு
பிணைப்பணமாக ரூபா 2000/- கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தவேண்டும்.
சிற்றுண்டிச்சாலையில் முழு நேரம் தங்கக்கூடியவர்கள் மட்டுமே
விண்ணப்பிக்கவேண்டும்
சித்தி பெற்ற கேள்விதாரர்
1-7-80-ந் திகதி சிற்றுண்டிச்சாலையை நடாத்தஆரம்பித்து
தொடர்ந்து24 மாதங்களுக்கு நடத்த வேண்டும்.
கூட்டுத்தாபனத்தால் மாதாந்தம் ரூபா 100/- வாடகைப் பணம்
அறவிடப்படும்.
கேள்விகள் முடிவு திகதி 16-6-80 முற்பகல் 10-00 மணி

விநியோக மனேஜர்,
பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனம்,
பரந்தன். 5866


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஆண்டவன் மீது பூரண விசுவாசம் கொள். அப்பொழுது தான் உனது கவலைகள் — பீதிகள் முதலியனஒழியும். மேலான சாந்தியும் உன்னில் அமையும்.

— சுவாமி சிவானந்தர்

## மக்கள் கருத்து

### பரந்தன் சந்தி பேருந்து தரிப்பு

பரந்தனிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் பிரயாணிகள் படும் அவஸ்தையைப் பற்றி 'ஈழநாடு' ஊடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்து பரிகாரம் காணும் நோக்குடன் இதை எழுதுகிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட பஸ் தரிப்பு நிலைய அடையாளங்கள் தற்போது காணாமல் போய்விட்டது. இதனால் பேருந்துகள் பரந்தன் சந்தியிலிருந்து முன்பு அடையாளக்கம்பம் இருந்த இடம்வரை அங்கு மிங்குமாக நிறுத்தப்படுகிறது. இதனால் பிரயாணிகள் பேருந்து வந்து எங்கு நிறுத்தப்படுமென்பது தெரியாது அங்குமிங்குமாக நின்று பேருந்து வந்து நின்றதும் ஏறுவதற்கு அவஸ்தைப் படவேண்டியுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் பஸ் தரிப்பு நிலைய அடையாளக் கம்பத்தை ஸ்தாபித்து உதவ முன்வர வேண்டும்.

க. நடராசா
பரந்தன்.

### பண்ணிசைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சென்ற ஞாயிற்றுக்கிழமை சைவபரிபாலன சபையினால் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியின் முடிவுகள்:

பரிசு பெறுவோர்:

மேற் பிரிவு: முதலாம் பரிசு: செல்வன். வை. கணேசலிங்கம். (தங்கப்பதக்கம்) மகாஜனக் கல்லூரி. இரண்டாம் பரிசு செல்வி. க. சிபாமலா இந்துசமய விருத்திக்கழகம்மானிப்பாய். மூன்றாம் பரிசு செல்வி. பராசக்தி சிவலிங்கம் ஸ்ரீ ஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை.

மத்திய பிரிவு: முதலாவதுபரிசு செல்வன். கு. ஸ்ரீ குமரன். யாழ் இந்துக்கல்லூரி. இரண்டாம் பரிசு செல்வி. க. சந்திரிகா. இந்து சமய விருத்திக் கழகம் மானிப்பாய். மூன்றும் பரிசு. செல்வி சி ஸ்ரீ ஞானபூசனி சைவசமய விருத்திக்கழகம் நாயன்மார்கட்டு.

கீழ்ப் பிரிவு: முதலாம் பரிசு செல்வி க. கிருஷ்ணபவானி [தங்கப்பதக்கம்] சரஸ்வதி மகாவித்தியாலயம் அராலி, இரண்டாம் பரிசு செல்வி ப. சுஜாதா சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர்கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் மூன்றும் பரிசு. செல்வி. கு பூலோகநாயகி மாதர்முன்னேற்றச்சங்கம் அராலி

அடுத்த மாதம்8ம் திகதி நடைபெறவிருக்கும் சைவமகாநாட்டில் பரிசுகள் வழங்கப்பெறும்.

### யாருடைய மணி ஓடர்கள்?

ஆனைப்பந்தி, நாவலர் வீதியைச் சேர்ந்த ரி. ஏ சபாரத்தினம் என்பவரால் யாழ் மணிக்கூட்டு வீதியில் கண்டெடுக்கப்பட்ட பிரிட்டிஷ் மணிஓடர்கள் மூன்று 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

# "ஈராக்கில் சிறுபான்மையினர் சுதந்திரமாகவே வாழ்கின்றனர்"

## நாடு திரும்பிய யாழ். எம். பி. தகவல்

(யாழ்ப்பாணம்)

"ஈராக் அரசின் நடுநிலையான போக்கு என்னை வெகுவாகக் கவர்ந்தது. ஈராக் மக்களின் பிரமாண்டமான பொருளாதார அபிவிருத்தியைக் கண்டு வியப்புற்றேன். ஈராக் மக்களின் அன்பும் பண்பும் என்மனதில் நட்பலைகளாக நிறைந்து நிற்கின்றன"

இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான திரு வெ. யோகேஸ்வரன் தமது ஈராக் விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் 'ஈழநாட்டு'க்கு அளித்த விசேஷ பேட்டியில் கூறினார்.

பக்டாட் நட்புறவுச் சங்கத்தின் அழைப்பின்பேரில் இம்மாதம் 17ம் திகதி முதல் 23ம் திகதி வரை ஈராக் குடியரசுக்கு விஜயம் செய்யும்வாய்ப்பு எனக்குக் கிட்டியது. ஈராக் மக்களின் அன்பும்பண்பும் இவ் விஜயத்தை ஒரு இனிய உணர்வாக என் இதயத்தில் இடம்பெற வைத்துவிட்டது. இத்தகைய ஒரு பேற்றை எனக்களித்த பக்டாட் நட்புறவுச் சங்கத்தினருக்கு என் இதய நன்றிகளைத் தெரிவிக்கவிரும்புகிறேன் என்று கூறிய திரு. யோகேஸ்வரன், தான் ஈராக் நாடு பேரீந்து மரங்கள் நிறைந்த பாலைவனப் பூமியென்றே கருதியிருந்ததாகவும் இதற்கு மாறாகப் பசுமை கரைபுரளும் வளநாடாக ஈராக் திகழ்கிறது என்று கூறினார்.

எமது தமிழீழத்தில் பனைகள் அதிகமாகக் காணப்படுவதுபோல் அங்கு பேரீந்து மரங்கள் காணப்படுகின்றன. ஈராக் மக்கள் விவசாயத்துறையிலும் கைத்தொழில் துறையிலும் எண்ணிப்பார்க்கமுடியாத பிரமாண்டமான அபிவிருத்தியை அடைந்துள்ளனர். சென்ற பதின்மூன்று ஆண்டுகளாக ஈராக்குடியரசு எல்லா வழிகளிலும் தீவிரமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

### ஆடிப்புரட்சி தந்த ஆக்கம்

"ஈராக்கின் எழுச்சிக்கு ஜூலை 17ம் திகதிய புரட்சியே காரணம், ஈராக் குடியரசு மக்கள் திறமையான இயக்கத் திறனுடையவரும். நேர்மையும் கண்ணியமும் மிக்கவருமான மரியாதைக்குரிய ஜனாதிபதி சதாம் ஹுசேனைக் குடியரசின் தலைவராகப் பெற்றது அந்நாட்டு மக்கள் செய்த பாக்கியம் என்றே கூறவேண்டும்.

தமது ஜனாதிபதியின் தலைமையில் ஈராக் மக்கள் உறுதியான அரசியல் ஸ்திரத்தையும் திட்டமிட்ட பொருளாதார அமைப்பையும் சமூக எழுச்சியையும் பெற்றுள்ளனர். தற்போது அரபு—ஆபிரிக்க நாடுகளின் சுதந்திர இயக்கங்களுக்கு கலங்கரை ஒளிவிளக்காகவும் உற்சாகமூட்டும் காரணியாகவும் ஈராக் திகழ்ந்து கொண்டிருக்கிறது. பக்டாட்—ஈராக்கின் தலைநகர், தற்போது சுதந்திர இயக்கங்களின் மெக்காவாக மிளிர்கின்றது.

### பலஸ்தீன விடுதலையில் அக்கறை

ஈராக்கின் வெளிநாட்டுக் கொள்கையின் அத்திவாரம் பலஸ்தீன மக்களின் விடுதலை எனும் குறிக்கோளின்மேல் அமைக்கப்பட்டுள்ளது. பலஸ்தீன மக்கள் பறிக்கப்பட்ட தமது தாயகத்தைமீட்க எடுத்துவரும் ஒவ்வொரு முயற்சிக்கும் ஈராக் தனது ஆக்கபூர்வமான நடவடிக்கைகள்மூலம் உதவிவருகிறது கடந்த எண்

### சந்திப்பு: பற்றிமாகரன்

பது ஆண்டுகளாக தங்கள் தாயகத்தைப் பலஸ்தீனமக்கள் திட்டமிடப்பட்ட படிப்படியான குடியேற்றங்கள் மூலம் இழந்துவிட்டனர். தற்போது தாய்மண்ணை இழந்து அகதிகளாகத் தவிக்கும் இம்மக்கள் ஈராக், லெபனான் போன்ற நாடுகளில் செம்மறியாடுகள் போல் நிரந்தர அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.

எங்களைப்போன்று விடுதலைக்காகப் போராடும் மக்கள் ஒவ்வொருவரும் பலஸ்தீன மக்களது விடுதலைப்போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். இறுதியாக இவ்வளவு திரத்துடன் போராடும் பலஸ்தீன மக்கள் தங்கள் தாயகத்தை மீட்பதில் நிச்சயம் வெற்றிபெறுவார்கள் என்பதில் எனக்கு திடமான நம்பிக்கையுண்டு.

### சுயாட்சியுடன் வாழும் சிறுபான்மை இனம்

நூற்றிநாற்பது லட்சம் மக்களைக் கொண்ட ஈராக் குடியரசில் முப்பது லட்சம் மக்கள் குறுட்ஸ் இனமக்கள் வாழ்ந்து வருகின்றனர். இச்சிறுபான்மை தேசிய இன மக்களுக்கு பூரண சுயாட்சியை வழங்கியதன் மூலம் ஈராக் அரசாங்கம் இம்மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்து வெற்றிகண்டுள்ளது.

ஈராக்கின் சோஷலிஸப்புரட்சிக்கு வித்திட்ட முன்னாள் ஜனாதிபதி அகமட் ஹசன் அல்பக்கர் அவர்களால் இம்மக்களுக்கு 1974ல் சுயாட்சி வழங்கப்பட்டது

### நடுநிலை கொள்கையில் முதன்மை

"1982ம் ஆண்டில் நிகழவிருக்கும் அணிசேரா நாடுகளின் மகாநாடு ஈராக்கில் நடைபெறவுள்ளது. இந்த நடுநிலை நாடுகளின் மகாநாடு ஈராக்கில் நடைபெறுவது எல்லாவகைகளிலும் நடுநிலைக் கொள்கைக்கு வலிமை அளிக்கக்கூடிய ஒன்றாகும். எதிர்காலத்தில் நடுநிலைநாடுகளின் தலைமையை ஈராக் ஏற்குமானால் அதன் மூலம் அணிசேரா நாடுகளின் குறிக்கோள் வெற்றி பெறும் என்பது வெளிவிடைமல் எனது தனிப்பட்ட கருத்துப்படியும் நடுநிலைநாடுகளின் தலைமைக்கு ஈராக்கே சாலப் பொருத்தமான ஒன்றாகும்.

### ஒற்றுமையை சீர்குலைக்கும் மதத்தலைவர்

ஈராக் மிகக்கடுமையான முறையில் நடுநிலைக் கொள்கையைக்கடைப்பிடித்த போதிலும், ஈரானின் மதத்தலைவர் அயதுல்லா கொமெய்னி ஈராக்கை கடுமையாக விமர்சித்து வருகின்றார். இவ்வேளையில் அயதுல்லா கொமெய்னி பதின்மூன்று வருடங்கள் ஈராக்கில் அரசியல் தஞ்சமடைந்திருந்தார் என்பதும் இக்காலக் கட்டத்தில் ஈரானிய முன்னாள் மன்னர் ஷா அவை பதவியிறக்க ஈராக்கிடம் பலவழிகளில் உதவிபெற்றார் என்பதும் உலகமறிந்த வரலாறு. ஆனால் ஈராக் முன்பு பாரசீக சாம்ராஜ்யத்தில் அடங்கியிருந்தது என்றும் எனவே பக்டாட் நகரம் ஈரானுக்குச் சொந்தம் என்றும் ஒரு புதிய கோரிக்கையை அயதுல்லா கொமெய்னி எழுப்பிவருகிறார். இரானின் அரபுநாடுகளின் ஒற்றுமையைச் சீர்குலைக்கமுனைகிறார் அவருடைய செயற்பாடுகளும் கொள்கைகளும் அவரது பழைய நிலையின்பிரதிபலிப்புகளாகவே இருக்கின்றன.

### ஈராக் தமிழருடன் சந்திப்பு

ஈராக்கில் வேலைசெய்யும் தமிழ்மக்கள் பலரையும் நான் சந்தித்து மகிழ்ந்தேன். அங்கு வேலை செய்யும் தமிழர்கள் தமது கடின உழைப்பால் ஈராக் அரசினதும் அதிகாரிகளினதும் பெரும் அன்பையும் ஆதரவையும் சம்பாதித்து இருப்பது கண்டுபெருமகிழ்வுற்றேன். அங்குள்ளோர் தமது சில பிரச்னைகள் பற்றி என்னிடம் எடுத்துக் கூறினர். ஈராக்கில் வேலைசெய்பவர்கள் மனநிறைவோடும் உடற்சுகத்தோடும் இருக்கின்றனர்.

ஈராக்கில் நான் மிகக் குறுகிய காலமே தங்கியிருந்த போதிலும் இக்குறுகிய காலத்திலே என்னை பல அபிவிருத்தி திட்டங்களுக்கும் அழைத்துச் சென்று அன்போடும் ஆதரவோடும் வரவேற்ற ஈராக், பக்டாட் நட்புறவுச் சங்கத்திற்கும் ஈராக் மக்களுக்கும் எனது ஈராக் நண்பர்களுக்கும் எனது இதய நன்றிகள்."

இவ்வாறு கூறிய யாழ். பாராளுமன்ற உறுப்பினர் "என்னை ஈராக் வெகுவாகக் கவர்ந்து விட்டது விரைவில் ஈராக் பற்றி விரிவான நூலொன்றையும் எழுத உள்ளேன்" என்றார்.

[சரித்திரப் பிரசித்தி வாய்ந்த வரணி சுட்டிபுரம் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று திங்கள் நடைபெறுகிறது]

## அம்மா கடைக்கண் திற

சுட்டிபுரம் கண்ணகி அம்மனுக்குச் சித்திரத்தேர் கட்டியரைக் காட்டக் கனகமணிப் — பட்டுக்
கொடியசைந்து வாருங்கள் என்றழைக்கும் வந்து
பிடிவடத்தை நன்றாய்ப் பிடி.

எழில்தழுவு சோலைவளர் என்கண் ணனையாளள்
பொழில்சுற்றி வீதி உலாப்போகச் — செழுமை
நிறை

சித்திரத்தேர் பாருங்கள் சுட்டிபுரத் தாள்
பணிந்து

பத்திமையாய்த் தேரை இழு.

ஊர்சிறக்க அந்த ஊற்றுப் பெருக்கெடுத்துப்
பார்முழுதும் சென்று பயன்விளைக்கத் — தேர்ஏறும்
கண்ணகியைப் போற்றுங்கள் கற்பூரம் காட்டுங்கள்
[illegible] நிறைந்த தேரில் விரைந்து.

சுட்டிபுரத் தாயே சொகுசாகத் தேரேறி
மட்டில் மகிழ்ச்சி மலர்ந்தளிப்பாய் — ஒட்டி
உறவாகும் அன்பர்கள் ஒன்று திரண்டார்
திறவாய் கடைக்கண் திற.

கல்வயல் வே. குமாரசாமி

### தமிழ்நாட்டு அரசியல்

# சாணக்கியர் யார்?

ஏதாவதொரு அரசாங்கம் மத்தியில் பதவிக்கு வந்தாலும் தமது கட்சி சாராதுள்ள மாநில அரசுகளைத் தவிர்ந்த ஏனைய மாநில அரசுகளைக் கலைத்து புதிய தேர்தல் நடத்துவது இந்தியாவில் சகஜமாகி விட்டது. காரணம், ஆட்சி நடாத்தும் அரசு லோகசபையில் தீர்மானிக்கும் முடிவுகளை அமுல்படுத்த ராஜ்யசபையின் அங்கீகாரம் வேண்டும். இந்திரா அரசாங்கம் பதவியேற்

-கண்ணபுரம் வேலன்-

றவுடன் ராஜ்யசபையில் ஜனதாவின் பலம் ஓங்கியிருந்தமையால் ஒன்பது மாநில அரசுகளும் கலைக்கப்பட்டன. ராஜ்ய உறுப்பினர்கள் சட்டசபை உறுப்பினர்களாலே தெரிவு செய்யப்படவேண்டுமாதலால் இந்த ஒன்பது மாநில சட்டசபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

இந்த ஒன்பதுமாநிலங்களில் தமிழ்நாட்டைப் பற்றியே இங்கு அதிக ஆர்வம் நிலவுகின்றது. சென்ற முறை நடைபெற்ற லோகசபை தேர்தலில் இந்திரா-கருணாநிதி கூட்டணி கட்சிகளே 39 தொகுதிகளில் (முஸ்லிம் லீக் ஒன்று உட்பட) 37 தொகுதிகளைக் கைப்பற்றியது. எம். ஜி ஆருக்கு 2 தொகுதிகள் மட்டுமே கிடைத்தன. பாண்டிச்சேரியிலும் லோகசபை, சட்டசபை இரண்டிலும் எம். ஜி. ஆர். கட்சி மண் கவ்வியது. அதேவேளையில் தமிழ் நாட்டில் லோகசபைத் தேர்தலோடு நடைபெற்ற வெளவாலோடு, உசிலம்பட்டி, பனைமரத்துப்பட்டி ஆகிய மூன்று சட்டமேல்சபை இடைத்தேர்தலில் வெளவால் கோட்டில் எம். ஜி. ஆரின் ஆதரவு பெற்ற இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியும் ஏனைய இரு தொகுதிகளிலும் எம் ஜி ஆரின் அ. தி. மு. க வெற்றி பெற்றது கருணாநிதியின் தி. மு. க தோல்வியடைந்தது.

அண்ணாவால் ஆரம்பிக்கப்பட்ட திராவிடமுன்னேற்றக் கழகத்தில் மலர்ந்த இரு மலர்கள் தான் இவர்கள். அண்ணாவின் நம்பிக்கைத் தம்பிமார்கள் இருவரும் இன்று இருதருவங்களாக தமிழ்நாட்டு அரசியலையே நிர்ணயிக்கக் கூடியவர்களாக உள்ளார்கள். இருவரும் அண்ணாவின் கொள்கைகளையே கடைப்பிடிப்பவர்கள் ஆனால், அரசியலில் இன்று பரமவைரிகள், அண்ணாவின் கொள்கைகள் இருபங்காகிவிட்டன. இந்த இருபங்குகளில் எந்தப்பங்கை கட்டிக் குறைக்கவேண்டுமென்

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வான் விபத்து

## 11 வயது மாணவன் பலி!

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வானுடன் மோதப்பட்டு அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சங்குவேலியைச் சேர்ந்த பாடசாலை மாணவன் ஒருவர் மரணமானார்.

மரணமான நவரத்தினம் சிவகுமாரின் [11 வயது] மரண விசாரணை யாழ் ஆஸ்பத்திரியில் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ் எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

மரணமானவரின் தாய் நவரத்தினம் சிவபாக்கியம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இறந்தவர் எனது 7-வது பிள்ளை. இம்மாதம் 20-ம் திகதி காலை இறந்தவருடன் சங்குவேலியில் இருந்து தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலுக்குச் சென்றேன். மாலை வீட்டுக்குத் திரும்பு வதற்கு பஸ்ஸுக்கு சில்லறைக்காக கொடுக்க காசை மாற்றுவதற்காக அவ்வீதியிலுள்ள கடை ஒன்றிற்கு எனது மகன் சென்றார்.

மகனைப் பார்த்துக்கொண்டு வீதிஓரத்தில் நின்றேன். அப்போது காங்கேசன்துறைப் பக்கமிருந்து ஒரு வான் யாழ்ப்பாணப் பக்கம் நோக்கிவேகமாக வந்து கடை ஓரத்தில் நின்ற எனது மகனை அடித்தது. மகன் சுமார் இருபது அடி தூரத்திற்கு அப்பால் தூக்கி எறியப்பட்டார். வான் நிற்காமல் ஓடிக்கொண்டிருந்தது. பின் அவ்விடத்தில் நின்றவர்கள் சத்தம்போட்டு வானை மறித்தனர்.

எனது மகன் இரத்தவெள்ளத்தில் அபாயகரமான நிலையில் வீதிஓரத்தில் கிடந்தார். பின் எனது மகனை யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்று அனுமதித்தோம். பின் 22ம் திகதி அவர் ஆஸ்பத்திரியில் இறந்துவிட்டார்.

மரணவிசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு வான் சாரதியைக் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி காங்கேசன்துறைப்பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

காங்கேசன்துறை பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர். (கெ)

# உலக சுகாதார நிறுவன உதவியுடன்குடிநீர்பாதுகாப்பு

(மாவிட்டபுரம்)

யாழ். மாவட்டத்தில் குடிநீர் அசுத்தமடைவதைத் தவிர்க்கவும், நன்னீரைட்பேணவும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியுடன் சிலதிட்டங்களை செயல்படுத்துவதுகுறித்து ஆராயப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகத்தில் நடந்த உலக சுகாதார ஸ்தாபனத்தைச் சேர்ந்த டாக்டர் எவ் ஒறிஸ்பிளக்வெல் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டமொன்றில் இத்திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்திலுள்ள கிணற்றுநீர், சுற்றுப்புற சூழ்நிலைகள், தாசிகள் போன்றவற்றால் அசுத்தமடைவதைத் தடுக்க கிணறுகளை மூடிக்கட்டி இயந்திரம் மூலம் தண்ணீரை வெளியேற்றுவதும் கிணற்றுநீரை "குளோரின்" போட்டு துப்புரவு செய்வதும் போன்ற பல திட்டங்கள் இங்கு ஆராயப்பட்டன.

இவ் ஆலோசனைக் கூட்டத்தையடுத்து காங்கேசன்துறை சுகாதாரவைத்திய அதிகாரி திரு. இ. செய்வேந்திரன் தமது பிரிவிலுள்ள 84பொதுக் கிணறுகளையும், 77பாடசாலைக் கிணறுகளையும் இவ்வாறு பேண முடியுமா? என்பது குறித்து இப்பகுதி உள்ளூராட்சிமன்றத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோருடன்தொடர்புகொண்டு ஆராய்ந்து வருகிறார்.

இவ்வாறு செய்யப்படும் வேலைகளுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் நிதி வழங்கி உதவுமென தெரிவிக்கப்படுகிறது.

## மட்டுநகர் புதிய செயலகம்

(மட்டக்களப்பு)

மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு செல்லையா இராசதுரையின் முயற்சியால் பத்து இலட்சம் ரூபாய் செலவில் அரசாங்கத்தினால் மத்திய செயலகம் ஒன்று அமைக்கப்படுவதற்கான அங்கீகாரம் மந்திரி சபையினால் வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இந்த மத்திய செயலகக் கட்டிடம் ஏற்கனவே திட்டமிட்டபடி மட்டக்களப்பு கல்விக் கந்தோர் வளவினுள் அமைக்கப்படும். தற்போதைய கல்வித்திணைக்களம் வேறு ஓர் இடத்திற்கு மாற்றம் செய்யப்படலாம் என அறிவிக்கப்படுகின்றது.

## பிணையில் செல்ல அனுமதி

(ஊர்காவற்றுறை)

டைனமைட் மூலம் பிடிக்கப்பட்டதாகக் கூறப்படும் சுமார் 1,000 ரூபா பெறுமதியான மீனுடன் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் மூவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த தேவபாலன், கைலைலிங்கம், வேலணையைச் சேர்ந்த கதிர்காமு ஆகிய மூவரும் வேலணை புங்குடுதீவுக் கடலில் டைனமைட் மூலம் பிடிக்கப்பட்ட மீனுடன் ஊர்காவற்றுறை பொலிஸ் சார்ஜண்ட் திரு. டண்டாரால் யாழ்ப்பாணம் பண்ணையில் கைதுசெய்யப்பட்டதுடன், மீன் ஏற்றிச் சென்ற வானும் கைப்பற்றப்பட்டது.

மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட மீன் நீதிமன்ற உத்தரவின்பேரில் பின்னர் அழிக்கப்பட்டது. சந்தேகநபர்கள் மூவரையும் தலா 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி ரி. கே. எஸ். திலகன் சம்பந்தப்பட்ட வானை அதன் உரிமையாளர் ரூபா 5,000 சரீரப் பிணையில் கொண்டு செல்லவும் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களின் சார்பில் சட்டத்தரணி திருமதி விஸ்ரீகாந்தா ஆஜரானார். (ந)

## வேலைஇழப்போருக்கு உணவு முத்திரை!

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த நான்கு, ஐந்து வருடங்களாக கடமையாற்றிவரும் தற்காலிக ஊழியர்களை அடுத்தமாதம் தொடக்கம் வேலை நீக்கம் செய்வதென்று சங்கத்தலைமைப்பீடம் செய்த முடிவை அடுத்து அவர்களுக்கு உணவு முத்திரைகளை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொடுப்பதற்கு தாம் நடவடிக்கை எடுக்கப்போவதாக சங்கத்தலைவர் திரு எஸ் கந்தையா தெரிவித்தார். இவர்கள் சங்கத்தில் மாதச்சம்பளம் 300 ரூபாவுக்கு மேல் எடுத்திருந்ததினால் உணவு முத்திரை பெறும் வாய்ப்பை இழந்திருந்தனர். இவர்கள் அடுத்தமாதம் முதல் பதவி இழப்பதையடுத்து அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தாம் இந்த நடவடிக்கையை எடுப்பதாக திரு. கந்தையா தெரிவித்துள்ளார்.

## இளைப்பாறினர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புத் தபால் நிலைய அதிபர் திரு. வி. தில்லையம்பலம் இம்மாதம் தொடக்கம் தமது பதவியிருந்து இளைப்பாறியுள்ளார். தபால் நிலைய ஊழியர்கள் சார்பில் திரு. தில்லையம்பலத்திற்குப் பிரியுபசாரம் அளிக்கப்பட்டது.

புதிய தபால் அதிபராக உதவித் தபாலதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ் ஏ. பி. மூர்த்தி பதவி உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## திருக்குறள் நூற் கண்காட்சி

(வேலணை)

வேலணையில் நடைபெறவிருக்கும் தமிழ் மறைக் கழகத்தின் 20-வது திருக்குறள் மாநாட்டினையொட்டி வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் திருக்குறள் நூற்கண் காட்சியொன்று இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 30, 31, 1-ம் திகதிகளில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் திருக்குறள் உரைகள், மலர்கள், மொழிபெயர்ப்புகள், ஆராய்ச்சி நூல்கள், அகராதிகள் இடம்பெறவுள்ளன. (ச)

சின்னமடுதாக்குதல் வழக்கு:

# எதிரிக்கு ஒத்திவைத்த சிறையும் அபராதமும்

(ஊர்காவற்றுறை)

சரவணை சின்னமடு தேவாலய கலவர வழக்கில் எதிரிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஊர்காவற்றுறை நீதிபதி திரு. கே. ரி. சிவஞானம் இத்தண்டனையை வழங்கினார்.

இவ் வழக்கில் சரவணையைச் சேர்ந்த விநாயகம், அப்புத்துரை ஆகிய இருவரையும் வாளினால் தாக்கி காயம் விளைவித்ததாக பளியங்கூடலைச் சேர்ந்த பொன்னுச்சாமி மாலிங்கம் என்பவர் மீது ஊர்காவற்றுறை பொலிசாரால் இக்குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து எதிரியின் சட்டத்தரணி கருணை காட்டுமாறு நீதிபதியிடம் விண்ணப்பித்தார். இருபகுதியினருக்குமிடையில் ஏற்பட்ட பகைமையின் காரணமாகவே இக்காயங்கள் விளைவிக்கப்பட்டதாக தெரிவித்த அவர் சம்பவத்தில் விளைவாக கைதுண்டிக்கப்பட்டிருக்கும் காயக்காரரில் ஒருவரான விநாயகத்திற்கு ரூபா5,000 நஷ்டஈடு வழங்க எதிரி தயாராகஇருப்பதாகவும் நடந்த சம்பவத்திற்காக மனம் வருந்துவதாகவும் குறிப்பிட்டார்.

காயமடைந்த விநாயகம், எதிரி வழங்க முன் வந்த பணத்தை ஏற்க விரும்பவில்லையென பொலிஸ் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

இதையடுத்து எதிரிமீதுள்ள இரு பிறச்சாட்டுகளுக்குமாக 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத்தண்டனையும், ரூபா 3 000 அபராதமும் எதிரிக்கு விதிக்கப்பட்டது

இவ் வழக்கில் பொலிஸ் தரப்பில் சட்டத்தரணி ஏ. அன்ரனிசட்டத்தரணி எஸ். கே. மகேந்திரனின் அனுசரணையுடன் ஆஜரானார்.

எதிரியின் சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆஜரானார். (உ)

ரூ. 2000 நோட்டு வழக்கு

# சத்தியம் செய்ததால் வழக்கு வாபஸ்!

(யாழ்ப்பாணம்)

2000 ரூபா நோட்டு வழக்கில் பணத்தை வாங்கவில்லையென்றும் நோர்ட்டுப் பத்திரத்தில் கையெழுத்திடவில்லையென்றும் எதிர்மனுதார் சத்தியம் செய்ததைத் தொடர்ந்து மனு வாபஸ் பெறப்பட்டது.

இவ்வழக்கு யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சே. பாலகிட்ணர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியைச் சேர்ந்த திருமதி. மகேஸ்வரி ஜெகநாதன் தம்மிடமிருந்து நோட்டுக்கு 2000 ரூபா பெற்றதாகவும் அப்பணத்தைத் திரும்பச் செலுத்தவில்லையென்றும் யாழ் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த தில்லையம்பலம் சுப்பிரமணியம் இம்மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இம்மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிர்மனுதார் தாம் மனுதாருக்குப் பணம் கொடுக்கவில்லையென்றும் சத்தியம் செய்தார் இதனைத் தொடர்ந்து மனுதாரர் வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டனர்.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகள் திருவாளர்கள் எம். எஸ். சுந்தரலிங்கம், எம். சோமசுந்தரம் ஆஜரானார்கள். எதிர்மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகள் திருவாளர்கள் பி நவரத்தினம், ஏ. முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் ஆஜரானார்கள். (கொ-அ)

## பருளாய் கோயிலில் திருட்டு!

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் பருளாய் விநாயகர் ஆலயத்தில் இரவு வேளையில் உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த வெள்ளிக் கவசம், மற்றும் பித்தளை வெள்ளிப் பாத்திரங்கள் ஆகிய சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதி மிக்க பொருட்களை கொள்ளையடித்துச்சென்றுள்ளனர். இது பற்றி சங்கானைப் பொலிசில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து தீவிர விசாரணை நடாத்தினர்.

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கிவரும் தமது சவர்க்கார உற்பத்தித் தொழிற்சாலையை பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க 9ம் இலக்க கிளையின் கட்டடத்திற்கு இடமாற்றம் செய்வதென்று தீர்மானித்துள்ளது. சங்கத் தலைவர் திரு. எஸ் கந்தையா தலைமையில் அண்மையில் நடைபெற்ற சங்க இயக்குநர் சபைக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது


சில நிமிட நேரத்துக்குள்ளாகவே பூச்சி, புழுக்களைக்கட்டுப்படுத்தும் அற்புத சக்திவாய்ந்த சர்வபூச்சிநாசினி

பரத்தியன் 6|3

மிளகாய், வெங்காயம், நெல், காய்கறி, மற்றும் எல்லாப் பயிர்களையும் பாதிக்கும் சகல பூச்சி புழுக்களையும் உடனே கட்டுப்படுத்தி, நீடியகாலம் தங்கும்தன்மையுடைய 'பரத்தியன்' 6/3

★ மிகவும் சிக்கனமானது ★ சக்தி வாய்ந்தது

கிடைக்குமிடம்: அக்ரேஸ் லிமிட்டெட் 59, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்கள்: ஜெகெம் 39, பிறிஸ்டல் பில்டிங், 51, யோர்க் வீதி, கொழும்பு-1 தொலைபேசி: 24353




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

"எங்களை அறையில் நிறுத்திவிட்டு

# 3 மணித்தியாலத்தின்பின் பொதியுடன்வெளியேறினர்"

## புங்குடுதீவு கொள்ளை வழக்கில்வயோதிபமாது சாட்சியாம்

(ஊர்காவற்றுறை)

"பயங்கர ஆயுதங்களுடன் எனது வீட்டினுள் பிரவேசித்தவர்கள் எங்களை ஒரு அறையினுள் நிறுத்திவிட்டு மூன்று மணித்தியாலங்களின் பின்னர் ஒரு பொதியுடன் வெளியேறினார்கள்."

இவ்வாறு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற புங்குடுதீவு கொள்ளை வழக்கில் சாட்சியமளித்த முத்துவேலு சிவக்கொழுந்து என்னும் வயோதிபமாது கூறினார்.

இவ் வழக்கில் இப்பெண்ணின் வீட்டைக் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியது, வீட்டை உடைத்து உட்புகுந்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்தது, கொள்ளையடிக்கும்போது காயம் விளைவித்தது. கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை வைத்திருந்தது போன்ற பத்துக் குற்றச்சாட்டுகள் நெடுந்தீவைச் சேர்ந்த செ. சதாசிவம், செ. இராசரத்தினம், அ. பாலசுப்பிரமணியம், புங்குடுதீவைச் சேர்ந்த கோ. பாலசிங்கம், சி. செல்வராசா, இ. கணேசமூர்த்தி, சி. தங்கராசா கோ. குணசிங்கம் ஆகிய எண்மர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது. இவர்களில் தங்கராசா என்பவர் இன்னும் கைதுசெய்யப்படவில்லை. விசாரணையின் ஆரம்பத்தில் எட்டாம் எதிரியான குணசிங்கம் களவெடுத்த பொருட்களை வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டதை யடுத்து அவருக்கு தண்டனை விதிப்பது அடுத்தமாதம் 4-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

முத்துவேலு சிவக்கொழுந்து தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"சம்பவதினம் இரவு நான் வீட்டு அறைக்குள் படுத்திருந்தேன். என்னுடன் அயலவர்கள் மூன்றுபேர் படுத்திருந்தார்கள் இரவு 9-00 மணியளவில் 'அம்மா' என்று யாரோ கூப்பிடும் குரல்கேட்டது. இதையடுத்து விறாந்தைக் கதவை உதைத்து திறந்து கொண்டு சுமார் எட்டு அல்லது ஒன்பது பேரளவில் வீட்டுக்குள் வந்தார்கள் அவர்களின் கைகளில் கத்தி, வாள், கிறிஸ்கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களும் இருந்தன என்னையும் மற்றவர்களையும் ஒரு அறைக்குள் பலவந்தமாகக் கொண்டு சென்று நிறுத்தி ஒருவனைக் காவலுக்கு வைத்துவிட்டு மற்றவர்கள் வீட்டைச் சூறையாடினார்கள். எனது தோடு, காப்பு என்பனவற்றை பயமுறுத்தி வாங்கினார்கள். சுமார் மூன்று மணித்தியாலங்களின் பின் ஓர் பொதியைச் சுமந்து கொண்டு வந்த அனைவரும் வெளியேறினார்கள். இதன் பின்னரே நாங்கள் கூச்சலிட்டோம். அயலவர்கள் உதவிக்கு ஓடிவந்தார்கள். வீட்டிலிருந்த நகைகள், பணம், கைக்கடிகாரம், வெள்ளித் தம்ளர்கள் உட்பட சுமார் 90,000 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன" என்றார்.

பொலிஸ் தரப்பில் சின்னம்மா, இரத்தினசபாபதி மகேஸ்வரி ஆகியோரும் சாட்சியமளித்தனர். கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் மீட்கப்பட்டுள்ள காப்பு, சங்கிலித் துண்டு மோதிரம் மற்றும் கைக்கடிகாரம் பவுண்கள், வெள்ளித் தம்ளர்கள் என்பன நீதிமன்றத்தில் சான்றுப் பொருட்களாக சமர்ப்பிக்கப்பட்டன

பொலிஸ்தரப்பில் சார்ஜன்ட் அந்தோனிப்பிள்ளையின் அனுசரணையுடனும் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரனின் உதவியுடனும் சட்டத்தரணி கே. பி. நவரெத்தினம் ஆஜரானார்.

8ம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவு, 6ம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி பி. கைலாசநாதனும் ஏனைய எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி ஆர் சபேசனும் ஆஜரானார்கள்.

மேல்விசாரணையை அடுத்த மாதம் 4ம் திகதிக்கு நீதிபதி திரு. ரி. கே என். திலகன் ஒத்திவைத்தார். (கு)

## வனசிங்காவுக்கு மீண்டும் அதேபாடசாலை?

[மட்டுநகர்]

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவரான திரு டி. எஸ். ஜே. வனசிங்கா மீண்டும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பு மட்டக்களப்பு அரசடி மகாவித்தியாலயத்தில் இருந்து கொழும்பு கொட்டாஞ்சேனை புனித அந்தோனியார் கல்லூரிக்கு திரு வனசிங்கா இடமாற்றம் செய்யப்பட்டது தெரிந்ததே.

இவரது இடமாற்றம் அநியாயமானது எனத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்திலும் கல்வி அமைச்சிடமும் கல்விச் சேவை ஆணைக்குழுவினருடனும் பலதடவைகள் சுட்டிக்காட்டியும் பயனில்லாமல் போகவே ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவிடம் இதுபற்றி எடுத்துக்கூறியதை அடுத்து இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டு மீண்டும் திரு. வனசிங்கா மட்டக்களப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

திரு. வனசிங்கா கொழும்புக்கு மாற்றப்பட்டபோதிலும் எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை மட்டக்களப்பு அரசடி மகாவித்தியாலயத்தில் இவருக்கு விடுதிவசதி நீடிக்கப்பட்டிருந்தது.

இவர் மூன்றும்தர அதிபர் என்பதாலும், விடுதிவசதி நீடிக்கப்பட்டிருப்பதாலும் பழைய பாடசாலைதான் இவருக்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது (அ)

## ஊரார்பணத்தில் சுகபோகமனுபவித்தாராம்

### பொதுமக்கள் பிடித்து பொலிசில் கொடுத்தனர்

(மாவிட்டபுரம்)

ஊராரின் பணத்தில் சுகபோக வாழ்க்கை நடத்தியதாக கூறப்படும் ஆசாமி ஒருவரைப் பொதுமக்கள் பிடித்துக் காங்கேசன்துறை பொலிசில் ஒப்படைத்துள்ளனர்.

தெல்லிப்பழை கரணவாய் என்னுமிடத்தைச் சேர்ந்த மாப்பாணி தர்மலிங்கம் என்னும் இந்த நபர் அச்சுவேலிப்பகுதியைச் சேர்ந்த பலரிடம் நகைகளை வாங்கி அடைவு வைத்தும், பணங்களைப் பெற்றும் பின்னர் மோசடி செய்துவிட்டதையடுத்து பொதுமக்கள் இவரைப் பிடித்து காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைத்தனர்.

இவர் குறித்து விசாரணை செய்யப்பட்டபோது ஊரவர்களிடம் நகைகளை வாங்கி அடைவு வைத்தும், பணமாகப் பெற்றும் 50 ஆயிரம் ரூபாவுக்குமேல் இவர் மோசடிசெய்துள்ளாரெனவும், இந்நபர் மோட்டார் சைக்கிள், கார் என்பன வாங்கி வைத்திருந்தாரென்றும் ஆசைநாயகி ஒருவரை வைத்திருந்தாரென்றும் தெரியவந்தது.

மல்லாகம் நீதிபதி திரு சி. ஆர் இராஜசிங்கம் இவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார் [அ]

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்

சண்டிக்குளி சைவமகாசபைப் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சு செல்லத்துரை. உபதலைவர்கள்: வே. புகபாலசிங்கம், த சோமசுந்தரம், செயலாளர்: இ. இ. நகேஜேஸ்வரன், உபசெயலாளர்: சு இரசையா, பொருளாளர்: ந. நித்தியானந்தராசா, உபபொருளாளர்: மு செல்வநாதன், காப்பாளர்கள்: வே நவரத்தினம், க சி நாகலிங்கம் 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

## இஸ்ரேலிய பாதுகாப்பு மந்திரி ராஜினமா

ஜெருசலேம், மே 25

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வைஸ்மன் தமது பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார்.

பாதுகாப்பு செலவின அதிகரிப்புக் குறித்து அமைச்சரவையுடன் கருத்துவேறுபாடு தோன்றியதைக் கருத்தே ஜெனரல் வைஸ்மன் ராஜினமாச் செய்துள்ளார் என அறிவிக்கப்பட்டது.

சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி-80

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் ரோட்டறிக் கழகம்

"சிறந்த நடாத்துநர் சிறந்த சாரதி"

போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் "ஈழநாடு" பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்திவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடாத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் "ஈழநாடு" பத்திரிகையில் இம்மாதம் 25 ம் திகதி முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும்படி யாழ் ரோட்டறிக்கழகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

ரோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவை பகுதி
பல் வைத்திய நிலையம்,
568 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவுப் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் சிறந்த சாரதி பெயர்

.................................... ....................................

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர்-பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்திவு-மன்னார்-வவுனியா

(நீங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No...............)

அனுப்புபவர் பெயர்..........................ஒப்பம்............

விலாசம்..........................................

## கசிப்புவேட்டையில் சங்கானைப் பொலிஸார்

[பண்டத்தரிப்பு]

சங்கானைப் பொலிசார் தமது பிரதேசத்தில் சட்ட விரோதமான முறையில் கசிப்பு சாராயம் வைத்து விற்பனை செய்பவர்கள் மீது திடீர் வேட்டைகளை தீவிரப்படுத்தி வருகின்றனர் கடந்த வாரம் சங்கானைப் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் திரு. டி. எல் குலரத்தின தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி பண்டத்தரிப்பிலுள்ள இரு தேநீர்க்கடைகளை முற்றுகையிட்டு அங்கு சட்ட விரோதமான முறையில் விற்பனைக்காக வைக்கப்பட்ட வடிசாராயத்தைக் கைப்பற்றினர்கள் இத்தேநீர்க்கடை உரிமையாளர்களை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது ஒருவருக்கு 750 ரூபா அபராதமும் மற்றவருக்கு 200 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

## சிறிமாவுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கை.

அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு ஜே ஆர். ஜயவர்த்தன பொலிசாருக்குக் கொடுத்த புகார் மீது தலையிட்டமை. (இ)

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையில்

# மலேசியத் தூதுவருக்கு அதிர்ச்சி தந்த தூசி!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் சிமெந்துத் தூசி இலங்கையின் மலேசிய தூதுவரது கவனத்தை ஈர்த்தது

யாழ்ப்பாண விஜயமொன்றை மேற்கொண்டு இங்கு வந்த இலங்கையின் மலேசிய தூதுவர் திரு முகமட் பின் அப்துல் கரீம் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையையும் பார்வையிட்ட [illegible] சிமெந்துத் தூசி இவரது கவனத்தை ஈர்த்தது.

தொழிற்சாலை எங்கும் சிமெந்துத் தூசி படிந்தும், சுற்றுக்குத் தூசி எங்கும் பரவியும் வருவதைக் கண்ட தூதுவர் ஆச்சரியப்பட்டு இத் தூசியின் மத்தியில் தொழிலாளர் எவ்வாறு கடமை புரிகிறார்கள் என வினவினாராம்

மலேசியாவில் இப்படியாக சிமெந்துத் தூசி வெளியேறுவதில்லை எனவும் அதுவும் பயன்படுத்தப் படுவதாகவும் கூறிய தூதுவர் அத்தகைய தொழில்நுட்ப அறிவுகளை இங்கு உபயோகப்படுத்த வேண்டுமெனவும் கூறினாராம்.

தொழிற்சாலையைச் சுற்றிப் பார்வையிட்ட பின் தொழிற்சாலை முகாமையாளர் திரு. சூரியதேவாவும் மற்றும் உயரதிகாரிகளும் தூதுவருக்குத் தேனீர் விருந்தளித்தார்.

பின்னர் கீரிமலைக்கும்மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கும் தூதுவர் சென்றுதரிசனம் செய்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானிலுள்ள அமெரிக்கர்கள் உடனடியாக வெளியேறவேண்டும்!

## விமான டிக்கட்டுகளையும் 'சுவிஸ்' தூதரகம் வழங்குகிறது

தெஹ்ரான், மே. 25 ஈரானிலுள்ள அமெரிக்கப்பிரஜைகளை இரண்டு வாரங்களில் ஈரானை விட்டு வெளியேறுமாறு சுவிற்சர்லாந்து தூதரகம் கேட்டுள்ளது.

ஈரானிலுள்ள அமெரிக்கர்களின் நலன்களை சுவிற்சர்லாந்து தூதரகமே கவனித்துவருகின்றது.

தற்போது திடீரென அமெரிக்கர்களை ஈரானைவிட்டு வெளியேறுமாறு சுவிற்சர்லாந்து தூதரகம் கேட்டுள்ளபோதிலும் அதற்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அமெரிக்கர்களின் ஈரானிய குடும்பங்களுக்கு தூதரகம் தற்போது மிக விரைவாகவே விசாக்களை வழங்கி வருவதுடன், வெளியேற விரும்பும் அமெரிக்கர்களுக்கு விமான டிக்கட்டுகளுக்கான பணத்தையும் வழங்கிவருகின்றது. [கு]

## ஈரான் பாராளுமன்றம் இவ்வாரம் கூடுகிறது!

### அமெரிக்கரின் நிலைகுறித்து இறுதிமுடிவு

தெஹ்ரான், 25 ஈரானின் புதிய பாராளுமன்றம் இவ்வார இறுதியில் கூடி அமெரிக்க பணயக்கைதிகள் விவகாரம் தொடர்பாக இறுதிமுடிவை எடுக்கும்.

கடந்த நான்கு மாதகாலமாக பணயம்வைக்கப்பட்டிருக்கும், அமெரிக்கர்களின் தலைவிதியை புதிய பாராளுமன்றமே முடிவுசெய்யும் என்று மதகுலவர் அயதுல்லா கொமெய்னி தெரிவித்துள்ள இவ்வேளையில் புதிய பாராளுமன்றம் எதிர்வரும் புதன்று கூடவுள்ளது. (கு)

## இந்திராவுக்கு எதிரான 3 வழக்குகள் தள்ளுபடி

புதுடில்லி, மே. 25 இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு எதிரான மேலும் மூன்று வழக்குகளையும் மத்திய புலனாய்வுத்துறை வாபஸ் பெற்றுக்கொண்டது.

போதிய சான்றுகள் இல்லாததன் காரணமாக இவ்வழக்குகளை வாபஸ் பெறுவதாக புலனாய்வுத் துறையினர் கூறியதை மாஜிஸ்டிரேட் ஏற்றுக்கொண்டதையடுத்து வழக்குகள் கைவிடப்பட்டன. (கு)

## சர்வதேச நீதிமன்றத் தீர்ப்பை ஈரான் நிராகரித்தது!

தெஹ்ரான் மே. 25 ஈரானிலுள்ள அமெரிக்க பணயக்கைதிகளை உடன் விடுதலைசெய்ய வேண்டும் என்ற சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஈரானிய அரசாங்கம் நிராகரித்து விட்டது.

அமெரிக்க பணயக் கைதிகள் விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்திய சர்வதேச நீதிமன்றம் உடன் பணயக்கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்று நேற்று தீர்ப்பு வழங்கியிருந்தது.

இத்தீர்ப்புத் தொடர்பாக ஈரானியவெளிநாட்டு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில் அத்தீர்ப்பை ஈரான் ஏற்கப்போவதில்லை என்று திட்டவட்டமாக மறுத்துள்ளதுடன், ஈரானிய முன்னாள் மன்னர் ஷாமீதான ஈரானின் குற்றச் சாட்டுகள் தொடர்பாகவும் சர்வதேச நீதிமன்றம் விசாரணைநடத்தி அவரை ஈரானுக்கு திருப்பி அனுப்புமாறு பணித்தால் மட்டுமே பணயக்கைதிகள் விடுதலைசெய்யப்படுவர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## ஜனாதிபதி அன்வர் சதாத் தொடர்ந்து பதவிவகிக்க எகிப்திய மக்கள் ஆதரவு!

கெய்ரோ, மே. 25 எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் காலவரையறையின்றி பதவியிலிருப்பதை மக்கள் ஆதரித்துள்ளனர்.

ஜனாதிபதி சதாத் காலவரையறையின்றி பதவிவகிக்க வகைசெய்யும் புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பாக நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் இதற்கு ஆதரவாக அதிகப்படியான வாக்குகள் கிடைத்துள்ளன.

1971ல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதியாக ஒருவர் 6 வருடங்களுக்கு மேல் இருக்க முடியாது ஆனால் அன்வர் சதாத் தொடர்ந்து பத்து வருடங்களாக ஜனாதிபதியாக இருந்து வருகிறார்.

தொடர்ந்து எத்தனை வருடங்களானாலும் சதாத் பதவி வகிக்க வகைசெய்யும் சட்ட மூலத்திற்கு மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்துள்ளதால் புதிய சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில்நிறைவேற்றப்படவுள்ளது. [ச]

## எடையின்மை பற்றிய அமெரிக்க - சோவியத் ஆராய்ச்சிகள் முடிந்தது!

மாஸ்கோ, மே 23 எடையின்மையின் உடற்கூற்று விளைவுகளை பூமியில் வைத்து ஆராய்வதற்கான சோவியத்-அமெரிக்க கூட்டுப் பரிசோதனைகள் இங்கு முடிவடைந்துள்ளன.

இப்பரிசோதனைகள் சுகாதார அமைச்சின்கீழ் இயங்கும் வைத்திய உயிரியற் பிரச்சினைகளுக்கான கலாசாலையில் நடைபெற்றன.

'எடையின்மை' பற்றிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பரிசோதனையில் கலாசாலை ஆராய்ச்சியாளர்களின் பல்வேறு குழுக்கள் ஈடுபட்டன. அக்குழுக்களில் ஒன்று அசாதாரண நிலையிலுள்ள படுக்கையில் நீண்ட நேரம் படுத்திருந்தது. அப் படுக்கையின் தலைமாடு கீழ் நோக்கி ஆறு பாகை கோணத்தில் சாய்ந்திருந்தது.

விண்வெளி வீரர்கள் விண்வெளியிற் பிரவேசிக்கு முன்னர் பெரும் பயிற்சியே இது என்று பேராசிரியர் எல். கக்குறின் தெரிவித்தார்.

உடலின் மேற்பாகங்களுக்கான ரத்தச் சுற்றோட்டத்தை சகஜநிலைக்குக் கொண்டுவந்து உண்மையான விண்வெளிப் பரப்பின் போதுள்ள எடையின்மைக்கேற்ப மனித உடலைத் தயார் படுத்துவதே இதன் நோக்கமாகும். (கு)

## ஒலிம்பிக் போட்டிகளில் இந்தநாடுகள் பங்குபற்றும்

ஹேக், மே 25 நெதர்லாந்து தேசிய ஒலிம்பிக் கமிட்டி மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் 22வது ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தனது வீரர்களை அனுப்புவது என்று முடிவுசெய்துள்ளது.

ஐரிஸ் விளையாட்டு வீரர்களும் மாஸ்கோ ஒலிம்பிக்கில் பங்குபற்றுவதென்று அயர்லந்து தேசிய ஒலிம்பிக் கமிட்டி முடிவு எடுத்துள்ளது.

இத்தாலியின் தேசிய ஒலிம்பிக்கமிட்டியும் மாஸ்கோ ஒலிம்பிக்கில் கலந்துகொள்வது என்று தீர்மானித்துள்ளது.

அதேவேளையில், ஒலிம்பிக்கில் பங்குபற்றுதிருக்கும் வகையில் இத்தாலியின் தேசிய ஒலிம்பிக் கமிட்டிக்கு இத்தாலி அரசு செய்துள்ள ஆலோசனை கண்டனங்களுக்குள்ளாகியுள்ளன. இது அமெரிக்காவுக்கு ஆதரவானநிலை அதேவேளையில் உலக அமைதிக்கு எதிரானது என்றும் கண்டிக்கப்பட்டுள்ளது.

இத்தாலி வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றினாலும் இத்தாலியக் குடியரசு தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் பயன்படுத்தமுடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## பரீட்சை முடிவுகள் வெளியாகின


(உடுப்பிட்டி)

யாழ் பல் தொழில் நுட்பக் கல்லூரியின் 1978/79ம் ஆண்டுக்கான இறுதிப்பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. தொழில் நுட்பக் கல்லூரியின் பழைய மாணவர்கள் தமது பரீட்சை முடிவுகளைத் தொழில் நுட்பக் கல்லூரிக்கு நேரில் வந்து அறிந்து கொள்ளுமாறு பல்தொழில் நுட்பக் கல்லூரி அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்பிரஸ்தாப மாணவர்கள் தாம் மீண்டும் இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியிருப்பின் இம்மாதம் 27ம் திகதி வணிகத்துறைத் தலைவரிடம் தமது பரீட்சை விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.


முழுக்குடும்பத்துக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த பானம்...

KLIM




"க்ளிம்" பிரசித்தி பெற்ற பால்மா உற்பத்தியாளர்களான அயர்லாந்து, போர்டன் கம்பனி லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், விட்டமின் A & D நிறைந்த 28% வெண்ணெய், கொழுப்புச் சேர்ந்து உலகத்திலேயே முதன் முதலாகத் தயாரிக்கப்பட்ட பால்மா. 'க்ளிம்' சுவை நிறைந்தது. நீண்ட காலம் பத்திரப்படுத்தக்கூடியதும், சுகாதாரத்திற்கேற்ப பதப்படுத்தப்பட்ட தன்மையும் கொண்டது.

சவர்ச்சியான ரின்களில் எவரும் வாங்கக் கூடிய விலையில் கிடைக்கிறது.

பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களிலும், முன்னணி வியாபாரிகளிடமும் பெறலாம்.

விலை ரூபா 16-50

மார்க்பெட் ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சந்தைப்படுத்தும் சம்மேளனம், (ம. ப.) 127 ஹைலெவல் ரோட், கொழும்பு-14. தொலைபேசி: 84991-2-3.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமான 6-வது வாரம்
**ஸ்ரீதர்** (சாவகச்சேரி)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயச்சந்திரன்
ராமலிங்கம்-டிங்கிரி கனகரத்தினம்- V. R. ஸ்ரீநடராசா
**ரத்தத்தின் ரத்தமே**
(வண்ண கலர்)
டைரக்ஷன் : ஜோ தேவ் ஆனந்த்

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
Daily 5 Shows
LAST WORLD IN GIANT ENTERTAINMENT
Michael Gough—Jess Contard in
**KONGA**
(Color) King of Terror
Next: LIVING DESERT

4-வது ஜனத்திரள் வாரம்
**ராணி** (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
10-30, 1-30, 4-15, 7-00, & 9-45
இந்தியாவில் தொடர்ந்து 200 நாட்கள் ஓடி
வெள்ளிவிழா சாதனை ஏற்படுத்தியது
✶ கமலஹாசன் (இருவேடங்களில்)
✶ ஸ்ரீதேவி மற்றும் பலர் நடித்த
**கல்யாண ராமன்** (கலர்)
தொடர்ந்து கொட்டகை நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுவதால், ரசிகர்களுக்கு முன்பதிவு செய்யப்படமாட்டாது.
குறிப்பு: மின்வெட்டு அமுலாகியுள்ள வேளைகளிலும் தடைகள் எதுவுமின்றி தொடர்ந்து காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன.

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
சிவாஜி- விஜயா நடித்த **தங்கப்பதக்கம்**
30-5-80 முதல் **ஆறிலிருந்து அறுபதுவரை**

**லிடோ** (யாழ்.நகர்) போன் 7888
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி -லதா **ஞானக்குழந்தை**

வெற்றிகரமான 10-வதுவாரம்
**வின்ஸர்** தொலைபேசி 466
(யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
தினசரி 10-30, 1-30, 4-30, 7-00 10-00
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி மற்றும் பலர் நடித்த
**நிறம் மாறாத பூக்கள்**
(வண்ணப்படம்)

**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்...விஜயா...சோ
நடித்த
**மனம் ஒரு குரங்கு**
26-5-80 முதல் முத்துராமன் - சுஜாதா நடித்த
உறவு சொல்ல ஒருவன்
30-5 80
எம். ஜி ஆர்.—லதா—மஞ்சுளா
**உலகம் சுற்றும் வாலிபன்**
(ஈஸ்மன் கலர்)

**SANTHI** JAFFNA Phone 7642
Daily 10-30, 2-30, 4 45, 7 00 & 9-45 p.m.
CORNEL WILDE—YAPHET KOTTO
**'SHARKS TREASURE'**
—SUSPENSE — THRILLER — COLOR—
WARNING!
The shark footage in this motion picture is 100% real No trick Photography, No Mechanical Models, No Miniatures were used. This Film was made at Great Risk of life and Limb For the first time on the Screen, you will see the Total shock of the most Sensational Shark fight ever Filmed!
—CORNEL WILDE

## தமிழ்நாட்டு—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பது தமிழ்நாட்டு வாக்காளர் களைச் சார்ந்ததாயிருக்கும், இருவரைப் பற்றிய வரலாறை எடுத்துக்கொள்வோம்.

திராவிட முன்னேற்றக்கழகம் வளர்ச்சிபெற, ஆரம்பத்தில் மிகக்கடுமையான இடர்ப்பாடுகளின் மத்தியில் கஷ்டப்பட்டவேளையில் அதன் வளர்ச்சிக்குக் கைகொடுத்தவர் மறைந்த கலைவாணர் என். எஸ் கிருஷ்ணனோடு எம். ஜி. ஆர். தான் என்பதை அண்ணா வாழ்ந்த காலத்தில் மறக்கவில்லை, மக்கள் மறக்கவில்லை. சினிமா மூலம் கட்சியை வளர்த்தார் கட்சிக்காக எவ்வளவோ லட்சக்கணக்கான ரூபாயைசெலவு செய்தார். அண்ணாவிற்காகவும், அவரது கட்சியான தி மு. க. விற்கும் தன் வாழ்நாளையே அர்ப்பணித்தார் அண்ணா வாழ்ந்த போதும் அமரத்துவமெய்திய பின்பும், கட்சிக்காக வாழ்ந்தவரென்பதை கலைஞர் மு. கருணாநிதியும் மறைப்பதற்குமில்லை. மறப்பதற்குமில்லை. முதலமைச்சரான அண்ணாவின்மறைவால் சட்டசபை சம்பிரதாயப்படி முதலமைச்சராக வரவேண்டிய கட்சிக்கொறடா நாவலர் நெடுஞ்செழியனை வரவிடாமல் கலைஞரை முதலமைச்சராக்கிய பெருமையை, உதவியை, நன்றியை கலைஞர் மு. கருணாநிதி மறைப்பாரா, மறப்பாரா?

கலைஞரோடு ஏற்பட்ட பனக்கசப்பால் அ. தி. மு. க. வை ஆரம்பித்து கூடிய கெதியில் வளர்ச்சியைஏற்படுத்தி, எதிர்க்கட்சி அணியிலிருந்துகொண்டு முதலமைச்சர் கலைஞர் மேல் ஊழல் குற்றச்சாட்டைச் சுமத்தி, இந்திராவின் சர்க்காரியா கமிஷனில் கலைஞரை குற்றவாளியாக்கி பின் நடைபெற்ற தேர்தலில் முதலமைச்சராகி, மூன்றாண்டு காலம் நாவலர், நாஞ்சிலார், பண்ருட்டி போன்றோரோடு ஆட்சிசெய்து இன்று தேர்தல் களத்தில் பல நண்பர்களை இழந்தும், துணிவோடு தோழமைக்கட்சிகளின் துணையோடு ஆட்சியைக் கைப்பற்ற நிற்கின்றார். இழந்தமுதலமைச்சர் பதவியை மீட்பாரா வென்பதை தீர்மானிப்பது தமிழ்நாட்டு வாக்காளர்களை பொறுத்தது. அதேவேளையில தமிழ்நாட்டு வாக்காளர்களுக்கு கலைஞரைப்பற்றி எடைபோட்டு தங்கள் வாக்குகளை தீர்மானிக்க வேண்டியவர்களாகவுள்ளார்கள்.

விலைவாசி ஏற்றம், வேலையில்லாத்திண்டாட்டம், வீடில்லாப்பிரச்சினை, பெண்களுக்குத் தேவையான தங்கப்பிரச்சினை இன்னும் இன்னோரன்ன பிரச்னைகளுக்கெல்லாம் தீர்வுகாணக் கூடிய சாணக்கியர், வருங்கால முதலமைச்சர் கலைஞரா, எம் ஜி. ஆரா? இதை தமிழ்நாட்டு வாக்காளர்களே தீர்மானிக்க வேண்டும்.

**ஹரன்** மருதனார்மடம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—கே. ஆர். விஜயா
**செல்வம்**
(புதிய பிரதி)

**வெஸ்லி** பாஷையூர்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி ஆர்-லதா நடித்த
**நீதிக்கு தலைவணங்கு**
(புதிய பிரதி)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
**வைர நெஞ்சம்**
(புதிய பிரதி)

# மன்னார்செய்திகள்

### பஸ் சேவை பற்றி புகார்

(மன்னார்)

மன்னார் — அனுராதபுரம் பஸ் சேவை படுமோசமடைந்துள்ளதாகப் பிரயாணிகள் குறை கூறுகின்றனர்.

பி. ப. 2-30 மணிக்குப் பின் மன்னாரிலிருந்து அனுராதபுரம் செல்ல பஸ் கிடைப்பதில்லையாம். அதேபோல் அனுராதபுரத்திலிருந்து மன்னாருக்கு வர பஸ் கிடைக்கவில்லை என பிரயாணிகள் குறை கூறுகின்றனர்.

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 13-ம் திகதி
திங்கட்கிழமை 26-5-1980

**மேடம்;** கலஸ்திரவழியாக மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும். காதலர் வாழ்வில் கனவுகியான திலை வாழ்க்கையில் உற்சாகப் திரம்பியதாக இருக்கும்.

**இடபம்:** செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும் நண்பர்களின் தொல்லைகளால் நஷ்டமடைவீர்கள் தொழில் புரியும் இடத்தில் புதிய எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

**மிதுனம்;** இன்று முன்னணியில நிற்பீர்கள் நிருவாக உத்தியோகஸ்தர்களின் செல்வாக்கு வளர்பிறையாகும். பிறவழிச் செய்தியும் கிடைக்கும்.

**கடகம்:** புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும் வியாபாரத்தால் முன்னேற்றம் உண்டு சிலர் வாழ்க்கையில் மாற்றங்கள் உருவாகும் நல்ல நாள்.

**சிங்கம்:** வழக்கறிஞர்களுக்கு மகிழ்ச்சிகரமான தினம் வண்கர்களாயின் அதிக ஆதாயத்தைப் பெறுவர் பொது மக்களின் ஆதரவும் கிடைக்கும் திடீர் இலாபமும் கிடைக்கும்.

**கன்னி:** எதிர் பாராத விளைவுகளால் பாதிக்கப்படுவீர்கள் சிலர் வாழ்க்கையில நஷ்டம் ஏற்படும் கடமையில் தடைகள் ஏற்படும் பயணத்தைத் தவிர்க்கவும்.

**துலாம்:** வாழ்க்கையில் சிரமங்கள் அதிகரிக்கும் சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படும் சுகாதாரத்தைப் பேணி நடக்கவும்

**விருட்சம்:** குடும்பத்திலும் இன்பமான சூழ்நிலை உருவாகும் உறவினர் மத்தியில் குதூகலம் தென்படும் பொதுவாக வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு.

**தனு:** ஏகாந்தத்தின் சாயல் நிழல் போல் தொடரும் சிலர் வாழ்க்கையில் பிரிவுத் துயர வேதனையைத் தரும் முற்கோபத்தினால் கலகங்களும் தோன்றக்கூடும். ஆத்திர உணர்ச்சியை அடக்கவும்.

**மகரம்:** நல்லதைச் செய்வீர்கள் நலன் பெருகும் பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள் சமூகத்தில் மதிப்பு உயரும் அரசியல்வாதிகள் அதிஸ்ட தேவதைகளை அணைத்துக் கொள்வர்

**கும்பம்:** மகிழ்ச்சிகரமான குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு ஏற்படும் நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள் கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும்.

**மீனம்:** முக்கியமான விடயங்களை இன்று பின்போடுவது விரும்பத்தக்கது உன் வீட்டிலேயே உணவு வேலை நடைபெறலாம் பகைவர்களின் நடவடிக்கை இறுதி வரை பரம இரகசியமாகவே இருக்கும் உஷார் நிலை விரும்பத்தக்கது.

சோதிடக் கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

### "விளையாட்டு ஒரு சந்தர்ப்பம்"

(மன்னார்)

"இளைஞர்கள் விளையாட்டுகளில் பங்குபற்றுவதன்மூலம் அதன் பண்புகளை அறிய முடிகிறது. விளையாட்டுப்போட்டிகளில் பங்குபற்றும் வீரர்கள் தமது வீரத்தை எடுத்துக் காட்ட சந்தர்ப்பம் கிடைக்கிறது."

இவ்வாறு நானாட்டானில் இடம்பெற்ற கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளுக்கிடையிலான விளையாட்டு விழாவில் தலைமை வகித்து நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் திரு. என். அமிர்தலிங்கம் கூறினார்

### மன்னாரிலிருந்து இளைஞர் கோஷ்டி

(மன்னார்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பரிமாற்றுத் திட்டத்தின் கீழ் பொலநறுவையைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் கோஷ்டி ஒன்று வங்காலையில் வீதியொன்றை அமைத்து வருவது தெரிந்ததே.

இத்திட்டத்தின் அடுத்த கட்டமாக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் யுவதிகள் கோஷ்டியொன்று விரைவில் பொலநறுவைக்குச் சென்று தேசிய இளைஞர் சேவை மன்ற அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடும் என திட்ட அலுவலர் திரு ஆறுமுகம் தெரிவித்தார்.

### கற்களை விற்றாரா?

(மன்னார்)

வீதியைச் செப்பனிட வெனக் கொண்டுவரப்பட்ட கற்களின் ஒரு பகுதியை விற்பனை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் தலைமன்னார் பகுதியில் கடமைபுரியும் தற்காலிக கங்காணி ஒருவரை தலைமன்னார் பொலிசார் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

### இன்று மன்னார் மாவட்டபோட்டி

(மன்னார்)

மன்னார் மாவட்ட விளையாட்டுப் போட்டிகள் மன்னார் விளையாட்டரங்கில் இம்மாதம் 24 ம் திகதி நடைபெறுமென்று மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. ஆர். கே. துரைராசா தெரிவித்தார்.

### மன்னாரிலிருந்து களுத்துறைக்கு

(மன்னார்)

மன்னார் கச்சேரியில் காணித் திணைக்கள காணி அதிகாரியாகக் கடமையாற்றி வந்த திரு சி பத்மநாதன் களுத்துறைக் கச்சேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## சுண்டிக்குளியில் சைவசமய தீட்சை

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளி சைவமகாசபையின் ஆதரவில் இம்மாதம் 30ந் திகதி காலை சைவசமயப் பிள்ளைகளுக்கு தீட்சை வழங்கப் படவிருக்கிறது.

சுண்டிக்குளி கலட்டிப்புல ஸ்ரீஞான வைரவர் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி மாணிக்கவாசகர் சமயச் சொற்பொழிவாற்றுவார். தொழிலதிபர் திரு. க. கனகராசா, சைவ அனுட்டானப் புத்தகங்களை இலவசமாக வழங்குவார். பிரம்மஸ்ரீ செல்வராசாக்குருக்கள் தீட்சையை ஆரம்பித்து வைப்பார். தீட்சை பெற விரும்புவோர் மேற்படி சைவமகாசபைச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ஈ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கான
ஆங்கிலப் பயிற்சி
3 ஆம் வகுப்பு New Method Seat Work 2-50
4 ஆம் வகுப்பு New Method Seat Work 3-75
5 ஆம் வகுப்பு New Method Seat Work 2-25
6 ஆம் வகுப்பு New Method Seat Work 2-50
8 ஆம் வகுப்பு New Method Seat Work 2-75
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


ஈழநாடு The EELANAADU 50 சதம்

## சிறையில் 11 ஆயிரம் பேர்

(கொழும்பு)
11 ஆயிரம் பேர் தற்போது நாட்டில் சிறைகளில் உள்ளனர். இவர்களில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களும் அடங்குவர்.

இந்த இட நெருக்கடியைத் தவிர்க்க மேலும் 4 சிறைச்சாலைகள் புதிதாக அமைக்கப்படவுள்ளன. (இ)


Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...



டில்கா வாச்வேக்ஸ்
- பஸ் நிலைய எதிர் மேல்மாடி.
404/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்

### திருமதி சவரிமுத்து வள்ளியம்மைப்பிள்ளை

காலஞ்சென்ற சவரிமுத்துவின் (மன்னார் வர்த்தகர்) அன்புமனைவியும், குணரத்தினம் (சுகாதாரப் பரிசோதகர், கைதடி) இராசமணி, துரைராசா, (மன்னார்) ஆகியோரின் அன்புத்தாயாருமான திருமதி சவரிமுத்து வள்ளியம்மைப்பிள்ளை 25-5-80-ல் காலமானார். அன்னாரின் பூதவுடல் சேட்டாக்காம் மணி ஒழுங்கை, மல்லாகம் இல்லத்திலிருந்து 26-5-80 இன்று பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக சப்பிட்டியான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: குணரத்தினம்

5884



## மரண அறிவித்தல்

### அனலைதீவு வே. கணபதிப்பிள்ளை ஜே. பி.

அனலைதீவைச் சேர்ந்த மலாயன் பென்சனியரும் முன்னாள் கிராமச் சங்கத் தலைவரும் சமாதான நீதவானுமாகிய திரு. வே. கணபதிப்பிள்ளை 25-5-80-ல் காலமாகிவிட்டார். இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், திருமதி கமலாசனி, திரு. இராமச்சந்திரா (பொறியியலாளர் சிங்கப்பூர்), திரு. பாலச்சந்திரன் (நிர்வாக இயக்குநர், சீநோர்), திரு. தனபாலன் (வைத்தியசாலை கொழும்பு) திருமதி வள்ளிமணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. துரைரத்தினம் (ஆசிரியர்) திருமதி ஜெயபாலேஸ்வரி (சிங்கப்பூர்) திருமதி லலிதாதேவி, திருமதி சரோஜா (ஆசிரியை) திரு. நாகராசா (கணக்காளர். லண்டன்) ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை (26-5-80) மாலை 4 மணிக்கு ஈமக்கிரியைக்காக பிறவுன் றோட் இரண்டாம் ஒழுங்கை 11-ம் இலக்க இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5885



## மரண அறிவித்தல்

### திருமதி றேசலின் வின்சென்ற்

யாழ்ப்பாணம், 67 ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய தலைமையாசிரியர் ஜி. பி. வின்சென்றின் அன்பு மனைவி றேசலின் வின்சென்ற் (இளைப்பாறிய தலைமையாசிரியை) காலமாகிவிட்டார். இவர் பாலசிங்கம் (சட்டத்தரணி) சுந்தரசிங்கம் (வைத்திய நிபுணர் அவுஸ்திரேலியா), இரஞ்சிதம் (சட்டத்தரணி), பத்மா (உதவி விரிவுரையாளர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்), விமலசிங்கம் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராசம் யொனிபேஸ், புஸ்பம் இம்மானுவேல், அலோசியஸ் இரத்தினசிங்கம், சுமித்தம் ஜோன், யூலியாள் மனுவேற்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரியும், இரஞ்சினி தனலட்சுமி ஆகியோரின் மாமியாரும் நிஷாந்தன், நில்மினி ஆகியோரின் பாட்டியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக செவ்வாய்க்கிழமை (27-5-80) பிற்பகல் 4-30 மணியளவில் யாழ்ப்பாணம் ஆசனக் கோவில் சேமக்காலைக்கு கொண்டு செல்லப்படும்.

5881


## விவசாயப் பிரதிநிதி தெரிவு

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலி - கல்வியங்காடு ஆகியவற்றுக்கான இரு விவசாயப்பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று காலை வேணிபடி வாசிகசாலையில் நடைபெறுகிறது. பயிர்ச்செய்கை அலுவலர் திரு. நித்தியானந்தா இதற்கான ஒழுங்குகளைச் செய்துவருகிறார். (இ)

## தேசிய எதிர்ப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
போராட்டங்களில் பங்குபற்றும் அதேவேளையில்

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையைச் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அங்கீகரிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக ஆராய்ந்து அங்கீகாரம் அளிக்க பேரவையின் பொதுச் சபையில் சமர்ப்பிப்பதென்றும் அதற்குமுன் தொழிற்சங்க கூட்டுக்கமிட்டியுடன் சந்தித்து போராட்ட நடவடிக்கைகள்பற்றி ஆராய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஐ. தே. க. அரசுக்கெதிராக போராட்டத்தை நடாத்துவதற்கு மக்கள் மத்தியில் நிதி சேகரிப்பதென்றும், இந்நிதி சேகரிப்பு இயக்கத்தை இம்மாதம் 28-ம் திகதி ஆரம்பிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (இ)

## தமிழ் சிங்கள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வடபகுதியை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய தமிழ் மக்கள் அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினூடாக கடந்த 4 மாதத்திற்குள் 1 லட்சத்து 60,000 ரூபாவை இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் செலவு செய்துள்ளோம்.

எமது அமைச்சு 1980 ம் ஆண்டும் யாழ் மாவட்ட இளைஞர்சேவை மன்றத்தின் அபிவிருத்திக்காக பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தில் 1லட்சத்து 90,000 ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இலங்கையிலுள்ள சகல மாவட்டங்களையும் எவ்வாறு அபிவிருத்தி செய்துவருகின்றோமோ அவ்வண்ணமே யாழ் மாவட்டத்தையும் எதுவித வேறுபாடுமின்றி அபிவிருத்தி செய்வோம்.

இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் இளைஞர்களை கனடாவிற்கு அனுப்பியுள்ளோம். எமது அரசு தமிழ், சிங்கள முஸ்லிம் என்ற வேறுபாடின்றி இந்நாட்டு மக்களை ஒரேகண் கொண்டுநோக்கிறது. இளைஞர் பரிமாற்றுத்திட்டத்திலும் எதுவித வேறுபாடுமின்றி தமிழ் இளைஞர்களையும் கனடாவுக்கு அனுப்பியுள்ளோம்.

நிர்வாகத்தைப் பரவலாக்குவதன் மூலமே இந்நாட்டை அபிவிருத்திசெய்யலாம். இதன் அடிப்படையில்தான் பிரதேச அபிவிருத்திச் சபைகளை ஆக்கியுள்ளோம். அதன்மூலம் எமது பிரதேசங்களை அபிவிருத்தி அடையச்செய்வோம். (கொ)

## 114 தொகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கும் வெய்யிலையும் பொருட்படுத்தாத கட்சித் தலைவர்களும்தொண்டர்களும் நேற்று தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.


## மரண அறிவித்தல்

### என். எஸ். உருத்திராபதி

மாவை ஆதீன நாதஸ்வர வித்துவானும் பிரபல இசையாசிரியருமான மாவிட்டபுரம் என். எஸ். உருத்திராபதி சிவபதமடைந்தார். ஈமைக்கிரியைகள் இன்று (26-5-80) பிற்பகல் மாவிட்டபுரத்தில் நடைபெறும்.

தகவல் தருபவர்
வே. குமாரசுந்தரம்
(மருமகன்)

5886



## டில்கா றேடியோ அன் ரிவி ரெக்னிசன்ஸ் நடாத்தும் தமிழக சட்டமன்ற தேர்தல் போட்டி - 1980

பத்துரூபா கொண்ட 15 பரிசுகள்! வெல்வது சுலபம்!! விரையுங்கள்!!!
முடிவுதிகதி 27-05-80
'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் கூப்பன்கள் மட்டும் செல்லுபடியாகும்
போட்டி இதுதான் அதிர்ஷ்டம் உங்களுடையது.

ஆட்சி அமைக்கும் கூட்டணி எது?..................
ஆட்சி அமைக்கும் கூட்டணி பெறும் ஸ்தானங்கள்...
போட்டி நடத்தும் ஸ்தாபனம்....................
அனுப்புபவர் பெயர் விலாசம்:- ..............................
..............................

உங்கள் கூப்பன்களை டில்கா றேடியோ அன் ரிவி ரெக்னிசன்ஸ், 202, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலைய முன்பாக) யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
முடிவுகள் 07-06-80 ஈழநாட்டில் வெளிவரும்



## மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, மருத்திதுறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!!


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் இதாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மே 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office Sri Lanka under No. CE/8948/78. The Eelanaadu, Post Box No. 49. Telegram: "Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org